பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 பங்குனி 8 ரபீ அவ் 11 இதழ் 39
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21 3-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலாதயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## துரையப்பா கொலைவழக்கு ஒத்திவைப்பு

[கொழும்பு]

யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவை கொலைசெய்ததாக 5 பேர் மேல் குற்றஞ் சாட்டிதொடரப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜூலைமாதம் 3ம் திகதிக்கு ஒத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

# அகதிகள் புறப்பட்ட பஸ்களை அனுராதபுரம் ஜி. ஏ. தடுத்தார்

## சிங்கள மாணவரை ஊருக்கு அனுப்ப அவருக்கு பஸ்கள் தேவைப்பட்டன

### ஏ. ஏஸ். பி. சொல்லியும் கேட்கவில்லை

### சன்சோனி கமிஷன் முன் வட்டுக்கோட்டை யு. என். பி. பிரமுகர் சாட்சியம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

(யாழ்ப்பாணம்)

**அனுராதபுர அகதிகள்முகாமிலிருந்து 12 பஸ்களில் தமிழ் அகதிகள் புறப்பட்டனர். அப்போது அனுராதபுர அரசாங்க அதிபர் வந்து பஸ்களை மறித்தார். யாழ். வளாகத்திலிருந்து அனுராதபுரம் வந்திருக்கும் சிங்களமாணவர்களை அவர்கள் விடுகளுக்கு அனுப்ப 6 பஸ்கள் தேவை என்றுர் அவர்.**

**அச்சமயம் அங்குவந்த அனுராதபுரம் உதவிப் பொலிஸ் அதிபர் மெண்டிஸ், சிங்களமாணவர்கள் சிங்களப் பிரதேசத்தில் இருப்பதால் அவர்களுக்கு ஆபத்தில்லை முதலில் தமிழ் அகதிகளை அனுப்பி வைப்பதுதான் மனிதாபிமானமாகும் என்று கூறியும் அரசாங்க அதிபர் சம்மதிக்கவில்லை**

அகதிகளை ஏற்றிய பஸ்கள் மீண்டும் அகதிகள் முகாமுக்குள் சென்றன அகதிகள் இறங்கினர். பின் அங்குவந்த இ.போ.ச அதிகாகளிடம் நான் நிலைமையைக் கூறியதும் அவர்கள் மேலும் 6 பஸ்களை விடச் சம்மதித்தனர். அதன்பின் அகதிகள் யாழ்ப்பாணம் புறப்பட்டனர்.

வட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி கடந்த தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகருமான திரு. என். இரத்தினசிங்கம், சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. இரத்தினசிங்கம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது!

நான் ஆகஸ்ட் 16 ம் தேதி கொழும்பு மெயில் ரயிலில் பிரயாணம் செய்தேன். அனுராதபுரத்தை ரயில் அடைந்ததும் அங்கு எங்கும் குழப்பமாக இருதந்து. ரயில் யன்னல்களை மூடும்படி எங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. அதன்பின் ரயில் புறப்பட்டு திடீரென ஒரு இடத்தில் நின்றது. சுமார் 150 யார் தூரத்திற்கு அப்பால் ரயில் நின்றது.

### இரக்கமின்றி தாக்கினர்

குண்டர்கள் இலர் என் பெட்டிக்குள் ஏறிக்கொண்டனர். என்பெட்டிக்குள் கீழே நிலத்தில் படுத்திருந்த ஒரு பிரயாணியை தாக்கினுர்கள். அவர் வேட்டி அணிந்திருந்தார். அவரை ஈவு இரக்கமின்றி படுமோசமாகத் தாக்கினுர்கள்.

என்னிடம் குண்டர்கள் வந்தார்கள் நீ தமிழனு? சிங்களவனு? என்று கேட்டார்கள் 'நான் தமிழன்' என்று கூறியதும், என்னைத் தாக்கினுர்கள். என் மூக்குத் துவாரத்திலிருந்து இரத்தம் வழிந்தோடியது. அதைக்கண்டதும் குண்டர்கள் அடிப்பதை நிறுத்தினுர்கள்.

### சங்கிலியைப் பார்த்தான்

என் சூட்கேசை எடுத்துக்கொண்டு, ரயிலிலிருந்து இறங்குமாறு குண்டர்களில் ஒருவன் என்னைப்பார்த்து கூறினுன். நான் எழுந்து சூட்கேசை எடுத்துக்கொண்டு ரயிலில் இருந்து இறங்கினேன். நான் ரயிலிலிருந்து இறங்கிய சமயம் ஒருவன் என் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை இழுத்து சென்றுவிட்டான் நான் சூட்கேசுடன் ஓடினேன். என்னைச் சிலர் துரத்தி வந்தனர். ஒரு இடத்தில், என்னை அவர்கள் மறித்துவிட்டார்கள் கத்தியை காட்டி பயமுறுத்திக் கொண்டார்கள்.

நான் வீதிக்கு ஓடிச்சென்றேன். தேநீர்கடை ஒன்றில் புகுந்து ஒளித்துக்கொண்டேன் மறுநாள் காலை கிலரின் உதவியுடன் புகையிரநிலையத்திற்கு சென்றேன் காலை 8 30 மணிக்கு, ரயில் நிலையத்திற்கு சென்றபோது ஒருவரை, ஒரு கூட்டத்தினர் துரத்திவந்தார்கள் அவர், ரயில் பிளாட்பாரத்தில் ஓடி வந்தார் அங்கு ஒரு போலிஸ் சார்ஜண்ட் இயந்திர துப்பாக்கியுடன் நின்றுர். இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் றைபிள்களுடன் கடமையாற்றிக்கொண்டிருந்தனர்.

### பொலிஸார் அலட்சியம்

குண்டர்கள் கூட்டத்திலிருந்து தம்மை பாதுகாக்கும்படி ஓடிவந்தவர் பொலிஸாரிடம் [கும்பிட்டு [மன்றுடி கேட்டார் பொலிஸார் இதனை அலட்சியம் செய்து மறுபக்கம் திரும்பிவிட்டார்கள் குண்டர்கள் அவரை அடியடியென்று உழக்கினுர்கள் அதே பேரல் வேறு இருவரும் குண்டர்களால் தாக்கப்பட்டனர் பொலிஸாருக்கு பத்துயார் தூரத்தில்தான் இச்சம்பவம் நடந்தது.

### சுடுவதற்கு ஓடர்இல்லை

நான் ஒருவிதமாக ரயில் நிலைய அதிபரின் கந்தோருக்குள் சென்றுவிட்டேன், அச்சமயம் சுமார் 150 பேர் வரை அங்கு வந்து ரயில் நிலைய அதிபரின் காருக்கு தீயிட்டனர். நான் அங்கு நின்ற பொலிஸ் சார்ஜனிடம் போய் இரு தடவை ஆகாயத்தை நோக்கி சுட்டால் கூட்டத்தினர் கலைந்து சென்றுவிடுவார்கள் என்றுகூறியபோது தங்களுக்கு சுடுவதற்கு ஓடரில்லை என்று கூறினர்.

அதன்பின் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இரு கான்ஸ்டபிள்களுடன் ஜீப்பில்வந்தார். அவர் குண்டாந்தடியின் உதவியுடன் சிலநிமிடநேரத்தில் கூட்டத்தை கலைத்துவிட்டார் நான் ஜீப்பில் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றேன்.

### ஜே.ஆருடன் தொடர்புகொள்ள முயன்றேன்

நான் அனுராதபுரத்தைச் சேர்ந்த இரு எம்பிக்களுடனும் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவர்கள் கொழும்பிற்கு சென்றுவிட்டதாக எனக்கு பதில் கிடைத்தது. அதன்பின் நான் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். நீண்டநேரம் தாமதம் எடுத்தது. இதனுல் பிரதமருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

பொலிஸ் நிலையத்தில் அகதிகள் வந்து குவியத் தொடங்கினுர்கள். பலர் காயமடைந்திருந்தனர்.

மறுநாள் காலை 10. 30 மணிக்கு நான் உதவி பொலிஸ் அதிபரைச் சந்தித்து அகதிகளை யாழ்ப்பாணம் அனுப்ப என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கேட்டேன்.

### யாழ்!செல்ல சிங்களச் சாரதிகள் மறுப்பு

யாழ்ப்பாணத்திற்கு செல்ல சிங்கள சாரதிகள் மறுப்பதாகவும், ஆதலால் பஸ்களை யாழ்ப்பாணம் கொண்டுசெல்ல சாரதிகளை தேடிக்கொண்டிருப்ப

(6ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மேற்கு இடைத்தேர்தல் இன்று

(கொழும்பு)

கொழும்பு மேற்கு இடைத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்களிப்பு நடைபெறும்.

38 ஆயிரம் வாக்காளரைக் கொண்ட இத்தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர் விபரம் வருமாறு:

அனுரா பஸ்ரியன் (ஐ. தே. க.) டி. வி. அபயக்கோன் (சிறிலங்கா சு. க.), பேர்னுட் சொய்சா (ல. ச. ச. க.), விஜய இந்திரா (சுயேச்சை), டாக்டர் எஸ் ஏ. கருணுநாயக்கா (சுயேச்சை) எம். பி. பெரேரா (சுயேச்சை), என். குணரத்தின (சுயேச்சை), ஜீ. கே. எஸ். விஜயவர்த்தனு (சுயேச்சை)

நாளை அதிகாலை தேர்தல் முடிவுகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ம-இ)

## பரு. பொலிஸ் கொலை:

# தேடப்பட்டவர் கல்முனையில் கைது!

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கருணுரத்னவின் கொலை தொடர்பாக பொலிசாரால் நீண்ட நாட்களாக தேடப்பட்டு வந்த சம்பந்தர் என்ற நபரை கல்முனையில் வைத்து மட்டக்களப்பு பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

சம்பந்தர் மட்டக்களப்பு பொலிசாரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைசெய்யப்பட்டு வருகிறுர். [கி-க]

## கம்யூ. செயலாளர் பி. மாணிக்கம்

சென்னை, மார்ச் 20

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவு பொதுச் செயலாளராக திரு பி மாணிக்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற கட்சியின் 8 நாள் மாநாட்டில் இத்தெரிவு இடம் பெற்றது (உ)

## வருடாந்த கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உடுவில் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. வே. சந்தையா தலைமைதாங்குவார். [உ]

## பதவி வெற்றிடம்

### நான்கு சில்லு உழவு இயந்திர சாரதி

புத்தூர் கமநலச் சேவை நிலையத்தில் மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி 31-3-78

விபரங்கள் மேற்படி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கமத்தொழில் சேவைப்பிரிவு
பெருங்பாக உத்தியோகத்தர்

8806

## இலங்கை வர்த்தக வங்கி

[வரை]

### கனேடிய உயர் ஸ்தானிகராலயத்துடன்

இணைந்து அளிக்கும்

## ஒலிம்பிக் XXI விளையாட்டுக்கள்

(மொன்ட்றியல் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பற்றிய 2 மணி நேர அழகிய வண்ணத் திரைப் படம்)

செவ்வாய் 21 மார்ச் 1978
Y. M. C. A., சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

புதன் 22 மார்ச் 1978
யாழ். மத்திய கல்லூரி மண்டபம்.

ஒவ்வொரு தினமும் மாலை 6-30 மணிக்கு

அனுமதி இலவசம் 8813

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் தரம் 111

இப் பதவிக்கு விண்ணப்பங்கள் கரைதுறைபற்று ப. நோ. கூ. சங்கத்தால் கோரப்படுகின்றன.

**வயது:**

23க்கும் 40க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

**தகமைகள்**

1. கொழும்பு சிரேட்ட தொழில்நுட்பக்கல்லூரியில் கணக்கியலில் பெற்றுள்ள டிப்ளோமா, அல்லது
2. கூட்டுறவுவேலையாளர் உயர்தராதரப்பத்திரத்துடன் அத்தகைய ஒரு நிறுவனத்தில் பெற்றுள்ள ஒருவருடகால அனுபவம், அல்லது
3. கணக்கியலில் திறமைச்சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரண தர) தராதரப் பத்திரமும் அத்தகைய ஒரு நிறுவனத்தில் பெற்றுள்ள 3 வருடகால அனுபவமும், அல்லது
4. 5 வருடகால அனுபவம்பொருந்திய முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்

**சம்பளம்:**

300 – 500
..............................
12 50×10, 15×5

விண்ணப்ப முடிவு திகதி: 10-4-78.

விரும்பும் விண்ணப்பதாரிகள் முழு விபரங்களையும் பொதுமுகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
கரைதுறைபற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

8798

## சுன்னாகம் பல நோ கூ சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தின் பாவனையிலுள்ள லொறிகளிலிருந்து கழிக்கப்பட்ட ரயர்கள், ரியூப்புக்கள், றிம்கள், கௌசிங், காஸ்கட், ஒயில் சீல், வில்லுத்தகடுகள் இன்னும் பல உப உறுப்புக்கள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப்பத்திரங்களை சங்கக் காரியாலய வேலை நேரங்களில் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 28-3-78 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
(சுன்னாகம். பல. நோ. கூ. சங்கம்)

18-3-78 8809

## கோட்டு விற்பனவு விளம்பரம்

D. C. J.
M B 14584

1 குழந்தைவேலு சுப்பிரமணியம்.
2. சப்பிரமணியம் இராசரத்தினம்.
-வழக்காளி

எதிராக

விசுவநாதர் முத்து, 303, பலாலிரோட், யாழ்ப்பாணம் திருநெல்வேலி.

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில் 14584 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 12,800/- பின் 14-9-74 தொடக்கம் 15-5 75 வரைக்கும் ரூபா 10,000/- க்கு 14 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகையும் இறுபடும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 585/77 சதம் இதில் ரூபா 2,500/- கொடுபட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று இறை திருநெல்வேலி, "செம்மண்கிடங்கு" ப. நி. லா. 2 பதிவு இல D 178/181 'செம்மண்கிடங்கு' ப. நி. லா 1 குழி 16ம் இரு ஆதனங்களும் ஒன்றுக்கூடி ப நி லா. 3 குழி 16, வீடும் பயிர்களும் வடக்கு எல்லை காணிக்குள் இருக்கும் கிணற்றுப் பங்கும் வளமையான வழிவாய்க்கால் உரித்தும் தெற்கு எல்லை காணிக்கு வடக்கு எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றுப் பங்கும் இதனூடாக உள்ளவழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் புறநீங்கலாய் எல்லை கிழக்கு ரோட் வடக்கு இராமலிங்கம் பெண்செல்லம்மாவின் உரிமைக்காரருக்கும் சண்முகநாதனின் ஆதனம் மேற்கு முத்தையா பெண் தையல் முத்துவுக்கும் விஜயித்தம்பி வேலுப்பிள்ளைக்கும் உரிய ஆதனம் தெற்கு விசுவநாதர் சுந்திரவேலுவுக்கும் விசுவநாதர் கனகரத்தினத்துக்கும் உரிய ஆதனம் பதிவுஇல D 393,44.

சி. செ. மாரிமுத்து
விற்பனவு ஆணையாளர்

கிராம அளவு
கித்தன்கேணி.

13 2 78 8808

## நெசவாளர் தேவை

20-3-78 ந் திகதி நெசவாளர் தேவையென்ற விளம்பரத்தில் கூறப்பட்ட துண்டு அடிப்படை என்பதை நாட்கூலிக்கு வேலை செய்யும் நாட்களுக்கு சம்பளம் வழங்கப்படும் என்பதை விண்ணப்பதாரர்கள் கவனித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. சி. லோகேஸ்வரன்,
தலைவர், சங்கானை
ப. நோ. கூ. சங்கம் [வ. உ]
சங்கானை

20-3-78 8814

## வரி விளம்பரம்

### தேவை

நல்ல நிலையில் இயங்கும் எவ்றி 5 அந்தர் தராசு ஒன்று [இவ்வாண்டு சீல் செய்யப்பட்டது] உடனடியாகத் தேவை. சுப்பிரமணியம் ஸ்டோர்ஸ், 30/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 8807

யாழ். மாவட்டப் புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க கோண்டாவில் மின்தறிநிலைய வளவில் அமைக்கவேண்டிய கட்டிடங்களுக்கான

## கேள்வி அறிவித்தல்

### கட்டிடங்கள்:-

1. களஞ்சியமும், காரியாலயம் (மாடிக் கட்டிடம்),
2. விடுதிச்சாலை,
3. சுற்று மதில்.

மேற் குறிக்கப்பட்ட வேலைகட்கான கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்கட்கு ரூபா 1,00000/-க்கு மேற்பட்ட பெறுமதியான கட்டிட வேலைகளைச் செய்வதற்குப் பதியப்பட்ட கட்டிட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து தலைவரால், 1978-4-10ம் திகதி பி. ப. 2-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சங்கக் காரியாலயத்தினால் வழங்கப்படும் பத்திரத்திலேயே கேள்விகள் யாவும் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 10/-ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 200/-ம் செலுத்தி 8-4-78 பி. ப. 2-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கட்டிடத்திற்கான மாதிரிப் படங்களையும், ஏனைய விபரங்களையும் சங்கக் காரியாலயத்தில் வழமையான வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்குமுரிய கேள்விப் பத்திரங்கள் தனித்தனியாகப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தலைவர்

யாழ். மாவட்டப் புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 8811

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

யாழ் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/75

1. விக்ரர் இம்மனுவல் எனப் பெயர் வழங்கும் விக்ரர் இம்மனுவேல் நீக்கிலாசும்
2. பெண் லில்லி இமல்டாவும், கரம்பன் தற்போது சுருவில், ஊர்காவற்றுறை. — வாதிகள்

எதிராக

அடைக்கலமுத்து மரியாம்பிள்ளை மகள் எலிசபெத் ரஞ்சினி மரியாம்பிள்ளை அல்லது ஐரின் எலிசபெத் ரஞ்சினி இல 4, சென்ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்: — பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/75ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்தவாதிகளுக்கு ரூபா 4970ம் மேலும் ரூபா 3500க்கு 9. 4. 76 தொடக்கம் 28. 10. 76 வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியையும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை 100க்கு 9 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 505/91 [இதில் நடைபெற்ற செலவு ரூபா 283/02 நடைபெறவேண்டிய செலவு ரூபா 125/82 மேலதிக சமயாசமயச்செலவு ரூபா 97/07] கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "அத்தியடியும் அத்தியடிப்புலமும் அத்தியடி புங்கடியிற் புலமும்" நி. பர 7. இதில் தென்கிழக்குப் பக்கமாக உத்தரவுபெற்ற அளவுக்காரர் கே. கே அம்புறோஸ் அவர்களால் 1968ம் ஆண்டு சித்திரைமாதம் 16ம் திகதி 581ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் காட்டப்பட்ட 2ம் இலக்கத்துண்டு நி. பர. 2 இரண்டும் பயிர்களும் எல்லை கிழக்கு சாரிநாதர் அந்தோனிப்பிள்ளை பெண் சிசிலியாவுக்குரிய ஆதனமும் கையொழுங்கையும் வடக்கு பிறடெறிக் பிரான்சிஸ் அந்தோனிப்பிள்ளைக்குரிய ஆதனம் மேற்கு குறித்த படத்தில் காட்டப்பட்ட 1ம் இலக்கத்துண்டு நிலம் தெற்கு தப்பு பாலசிங்கம் பெண் முத்துசாமியினுதனம் இதடங்கலும் இன்னும் குறித்த கையொழுங்கையால் போக்குவரவுசெய்யும் வழிப்பாதையுரித்தும் இதடங்கலும்.

க, சுப்பிரமணியம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

89, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

16.3 78. 8812

ஈழநாடு
The Eelanaadu

## வெளிநாட்டு தூதுவர்கள்

இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. ஹோவார்ட் ரிக்கின்ஸ் யாழ்ப்பாணத்துக்கு வந்து பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டுபலநிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டபின் இன்று கொழும்பு திரும்புகிறார்.

இலங்கையிலுள்ள செக்கோஸ்லவாக்கிய ஸ்தானிகர் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்துதிரும்பினார்.

இலங்கையிலுள்ள மற்றும் பல நாடுகளின் தூதுவர்களும் இனி யாழ்ப்பாணம் வந்து செல்லக்கூடும்.

சில காலத்துக்கு முன் இலங்கையிலுள்ள ஸ்தானிகர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவது மிகமிகக்குறைவு; அப்படிவந்தாலும் இங்குள்ள அரசியல் தலைவர்களைச் சந்திப்பதற்கும் பேசுவதற்கும் தயங்குவர்

பரிசளிப்பு விழா அல்லது ஒரு வைபவம் என்று ஏதாவதில் கலந்துகொள்வதற்கு வந்தால் அந்த நிகழ்ச்சியில் மட்டுமே கலந்துகொண்டு திரும்புவர். வேறு இடங்களுக்குச் சென்று பார்வையிடுவதும் அரிது.

இந்திய தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் சில தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பிய போது "இவர் ஏன் அடிக்கடி யாழ்ப்பாணம் செல்கிறார்?" என்று குரல் எழுப்பப்பட்டது மட்டுமல்ல அவர் இலங்கையில் தொடர்ந்து கடமையாற்றாமல் தமது நாட்டுக்கு அனுப்பப்பட்டார்.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. இதற்கு என்ன காரணம்?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய அரசுப் பேரவைக்குழுவின் தலைவரான திரு. அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவுசெய்யும் வாய்ப்புக்கிடைத்ததுதான் இந்த மாற்றத்துக்குக் காரணமாகும்.

பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்கள் பதவியேற்ற பின் ஒரு நாட்டிலுள்ள பிறநாட்டுத் தூதுவர்கள் அவர்களைச் சந்திப்பது ஒரு சம்பிரதாயம். இதேபோல் எதிர்க்கட்சித் தலைவரையும் அவர்கள் சந்திப்பார்கள்.

இப்படி இலங்கைக்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களும் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசுவார்கள்.

இலங்கையிலுள்ள ஸ்தானிகர்கள் பலர் இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்திருக்கிறார்கள்.

இந்தச் சந்திப்புக்களின் போது இலங்கையிலுள்ள தமிழ்மக்களின் நிலைபற்றி எடுத்துவிளக்கிக்கூறும் திரு. அமிர்தலிங்கம் இலங்கைக்கு வெளிநாடுகள் வழங்கும் உதவி தமிழ்ப்பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அந்த உதவி எப்படிப் பயன்படுத்தப்படவேண்டுமென்பதில் அக்கறை செலுத்தவும் அருகதையுண்டு.

சமீபத்திய கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அமெரிக்கா கூடாரங்களும் மற்றும் பொருள்களும் வழங்கியிருந்தது.

யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க ஸ்தானிகர் கிளிநொச்சிப்பகுதியிலுள்ள அகதிகள் முகாமுக்கும் சென்று தாங்கள் அளித்த உதவி அவர்களைப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதையும் நேரில் தெரிந்து கொண்டார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத்தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கும் மற்றும் தமிழ்ப் பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்ப்பது அந்தப் பகுதிகளுக்கும் இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் சிறிதாவது சென்றடைவதற்கு உதவக்கூடும்.

தமிழ்ப்பகுதிகள் பொருளாதாரவிருத்தியடையவில்லையென்பதையும்கடந்த பல வருடங்களில் இப்பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் அமைக்கப்படவில்லையென்பதையும் இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகள் தெரிந்துகொள்வது பிறிதொரு சந்தர்ப்பத்தில் இப்பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருள்களைக்கொண்டு பெரிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வாய்ப்புக்கிடைக்கலாம்.

இலங்கையிலுள்ள இதர பல நாடுகளின் ஸ்தானிகர்களும் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்ய வாய்ப்பேற்படுத்தப்படவேண்டும். இலங்கைக்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களையும் தமிழ்ப்பகுதிகளுக்கு அழைப்பதும்பயன் தரும்.

# கட்டுடை விநாயகர் ஆலய சித்திரதேர் வெள்ளோட்டம்

*கட்டுடை அரசடி விநாயகர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டவிழா நாளை நடைபெறுவதை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.* [ஆ-சி]

இவ்வாலயம் சுமார் 400 ஆண்டுகாலப் புரதானப் பெருமைவாய்ந்தது. கடந்த 80 ஆண்டுகாலமாக மகோற்சவங்கள் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன. 1970ம் ஆண்டில் பாலஸ்தானம்செய்து திருப்பணிவேலைகள் காலஞ்சென்ற முன்னாள் யாழ் நகர சபை பரிபாலகர் ஆ. வ. சின்னையா அவர்களினது அயராத உழைப்பினாலும் அடியார்களின் ஒத்துழைப்பினாலும் நடாத்தப்பட்டு26-6-71ல் மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது.

இப்பொழுது திரு. செ. சுப்பிரமணியம் அவர்கள் ஆலய நிர்வாகியாக அரும் பணிஆற்றிவருகின்றார். அறிவும் ஒழுக்கமும்மிக்க பிரம்மஸ்ரீ எஸ். பாலசண்முகசர்மா அவர்களும் அவருடைய சகோதரர்களும், பிரதிஷ்டா சிரோன்மணி சாமி விஸ்வநாதக் குருக்களின் அனுசரணையுடன் நித்தியபூஜையை கிரமமாக நடத்திவருகின்றார்கள்.

ஆனால் இவ்வாலயத்துக்குரிய கட்டுத்தேர் மிகவும் பழுதுபட்டுவிட்டதால் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தேர் இல்லாத குறை இருந்தது. இதை நிவர்த்திசெய்வதற்காக கட்டுடை அடியார்கள் 23-4-76ல் தேர்த்திருப்பணிச் சபை ஒன்றினை அமைத்தார்கள்.

இச்சபைக்கு முன்னாள் வைத்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. இ. சுப்பிரமணியம் அவர்கள் தலைவர் திரு. இ. சிவசங்கரன், திரு. த. சண்முகதாசன் அவர்கள் இணைச்செயலாளர்கள் திரு. த. பரஞ்சோதி தனாதிகாரி இச்சபையின் அயராத உழைப்பினாலும் அடியார்களின் மனமுவந்த ஈகையினாலும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் சேர்க்கப்பட்டு சித்திரத் தேர் உருவாக்கப்பட்டிருக்கின்றது. தேர்மிண்டியும் கட்டப்பட்டுள்ளது.

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய கலைஞர்கள், சிற்பகலாமணி ஆ. ஜீவரட்ணம் ஸ்தபதியார் அவர்களின் தலைமையில், இச் சித்திரத்தேர் அழகுற நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 22-3-78 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் வெள்ளோட்டம் நடைபெறும். அத்தருணம் சிற்பகலாமணி அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் அவர்கள் பொன்னாடை போர்த்தி, சபையார் தங்கப்பதக்கம் அன்பளித்து அவர்களை கௌரவிப்பார்கள். மறுநாள் தேர்த் திருவிழா மிக விமரிசையாக நடைபெறும். —ஓர் அன்பர்

## ஈழத்துச்சிதம்பரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர்ச் சிவன்கோவில் பங்குனிச் சிவன் மகோற்சவம் கடந்த புதன் கிழமை முதல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது:

எதிர்வரும் 23ந் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும், மறுதினம் தீர்த்தோற்சவமும், கொடியிறக்கல் வைபவமும் நடைபெறவுள்ளது.

இரதோற்சவத்தன்று ஆலய முன்றலில் திண்ணபுர இளைஞர்களால் விசேட தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்படவுள்ளது. அத்துடன் அன்றைய தினம் விசேட பஸ் சேவைகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இறுதி உற்சவமான பூங்காவன உற்சவம் 25ந் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

...... [உரு. நி-உ]

(சுழிபுரம்)

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோயில் பொங்கல்விழா இன்று பகல் தொடக்கம் புதன் காலைவரை நடைபெறும் இப்பொங்கல் விழாவில் பல்நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தத்தம் நேர்த்தியை நிறைவேற்றுவர்.

## திருநாள் பஜனை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிறிஸ்தவசேவா ஆச்சிரமத்தின் ஆதரவில் உயிர்த்தெழுந்த திருநாள் இன்னிசைபஜனை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. [உ]

## மணிவாக்கு

பிறருக்கு நன்மை செய்யும்பொழுதுகூட அந்நன்மையை பெறுபவர்களின் குண இயல்பை அறிந்து செய்யவேண்டும். இல்லையேல் அதுவும் பெரும் தீமையைத்தரும்,

—திருவள்ளுவர்

## "இறைவனை நோக்கி உள்ளத்தை திருப்புவீர்"

### பக்திநெறி பற்றி தங்கம்மா உரை

(வட்டுக்கோட்டை)

"கோவில்களைக் கட்டுவிக்கிறோம்; கும்பாபிஷேகங்களைச் செய்விக்கிறோம். நாமும் சைவர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறோம். ஆனால் ஆலயங்களோடு எமது வாழ்வு எப்படி இணைந்துள்ளதென்பதைப் பற்றி நாம் சிந்திப்பதில்லையே" என்று பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் நடைபெற்றுவரும் பங்குனி உற்சவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "'கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்ற முதுமொழியைப் போற்றி வாழும் சைவர்களாகிய நாம், கோவில்களின் அமைப்புப் பற்றியும், அங்கு நடைபெறும் மகோற்சவங்கள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியம். இதன் மூலம் சமயமும், எமது வாழ்க்கையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருப்பதை நாம் உணரலாம்.

"எல்லோரும் கோவில்களுக்குச் செல்கின்றனர். ஆனால் அவர்களில் எல்லோரது உள்ளமும் இறைவனை நோக்கிச் செல்வதில்லை. இறைவனிடத்திலே எமக்கு அன்பு வேண்டும். அன்பு தோன்றும் இடம் உள்ளமேயாகும். எனவே எமது உள்ளத்தை இறைவனை நோக்கித் திருப்புதல்வேண்டும். மணிவாசகர்கூட, இறைவா, உன்னிடத்திலே நீங்காத அன்பு வேண்டும் என்றே கேட்கிறார். அன்பு இல்லாதவரை நாம் செய்கின்ற வழிபாட்டிலோ, செலுத்துகின்ற பக்தி நெறியிலோ பயனில்லை" என்றார்.

## "நம்மவர் சளைத்தவர் அல்லர்"

(வெள்ளவத்தை)

"இலங்கைக் கலைஞர்கள், எந்த நாட்டுக் கலைஞர்களின் திறமைக்கும் குறைந்தவர்கள் அல்லர். இதை ஏற்கனவே சர்வதேசத் திரைப்பட விழாக்களில் நமது திரைப்படங்கள் நிரூபித்துள்ளன."

இவ்வாறு இலங்கை-லண்டன் சி. பி. எஸ். நிறுவனத்தின் கூட்டுத் தயாரிப்பான 'சீதாதேவி' திரைப்படத்தின் விசேஷ காட்சியின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா குறிப்பிட்டார்.

மேற்படி திரைப்படத்தின் விசேஷ காட்சி கொழும்பு நீகல் படமாளிகையில் நடைபெற்றது. இலங்கை-லண்டன் கூட்டுத் தயாரிப்பான இத் திரைப் படத்தில் இராவணனாகச் சிங்களத் திரைப்பட நடிகர் காமினி பொன்சேகா நடித்துள்ளார்.

......

## இ. போ. ச. பயிற்சி

(உடுப்பிட்டி)

1978ம் ஆண்டுக்கு இ. போ. ச.வினால் நடாத்தப்படும் மொரட்டுவையில் உள்ள ஜெர்மன் தொழில் நுட்பப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான உளச்சார்பு பற்றிய எழுத்து மூலப் பரீட்சை எதிர்வரும் 19ந் திகதி கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தில் பயிற்சியாளர்களைச் சேர்ப்பதற்கு, க. பொ. த. (சாதாரண தரம்) அல்லது தே. க. பொ. த. பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளிடமிருந்து கடந்த மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது

இப்பயிற்சித் திட்டத்தில் அனுமதிக்கப்படும் பயிற்சியாளர்களுக்கு மோட்டார் மெக்கானிக்கல், மின்சாரத்தொழில் வளர், பொறியியல் இயக்க வல்லுநர், பொருத்துநர் போன்ற பயிற்சிகள் உட்பட நான்கு வருட காலப் பயிற்சி அளிக்கப்படும்.

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை உபஅதிபராகப் பதவிஉயர்வுபெற்று காரைநகர் இந்துக்கல்லூரிக்கு மாற்றலாகி வந்துள்ளார்.

செந்தமிழர் இயக்க மகாநாடு:

## அமிர், இராசு, காசி சேனதிக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

செந்தமிழர் இயக்கத்தின் மாநாடு ஏப்ரல் மாதம் 9ந் திகதி ஆனைப்பந்தி உயர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது

இம்மாநாட்டிற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் திரு. மாவை. சேனாதிராசா, மட்டக்களப்பு முதல்வர் திரு செ. இராசதுரை, கவிஞர் காசி. ஆனந்தன் மற்றும் தென்னிலங்கை இடதுசாரிப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான தீர்மானங்கள் செந்தமிழர் இயக்கத் தலைமைச் செயற்குழுவின் முதலாவது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

'செந்தமிழன்' என்னும் பத்திரிகையை இயக்க ரீதியாக வெளியிடுவதென்றும், முதலாவது இதழை மாநாட்டுச் சிறப்பிதழாகப் பொதுச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலத்தின் அறிக்கையை முக்கிய அம்சமாகக் கொண்டதாக வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மூவர் கொண்ட ஆசிரியர் குழுவும் தெரிவாகியது.

மாநாட்டுச் செலவுக்கான நிதியை யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் சேகரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது:

'செந்தமிழன்' பத்திரிகைக்கு திரு. ஏ. அமிர்தலிங்கத்தின் வாழ்த்துச் செய்தியும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## "பண்ணிசைத் தத்துவம்"

(பண்டத்தரிப்பு)

பண்ணிசைக்கலாநிதி எஸ். கே. சிவபாலன் "பண்ணிசைத் தத்துவம்" என்னும் பண்ணிசை பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார். திருமுறைகளை பண்ணோடும் பக்தியோடும் ஓதுமுறைபற்றி ஆராய்ச்சிசெய்து ஈழத்தில் முதல்தடவையாக எழுதப்பட்டுள்ள இந் நூலுக்கு சென்னை தமிழ் இசைச் சங்கமும், திருப்பனந்தாள் ஆதீனமும் அணிந்துரை வழங்கியுள்ளன. தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் பாராட்டுரை வழங்கியுள்ளார்.

இந் நூலை விரைவில் வெளியிடுவதற்கான முயற்சிகளை திரு. சிவானந்தன் மேற்கொண்டுவருகின்றார். [உ]

# யுத்தமுனைக்கு ஐ. நா. சமாதானப் படை

நியூயோர்க், மார்ச் 20

லெபனன் எல்லையிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறிவிடவேண்டும் என்று ஐக்கிய நாடுகள்சபை இஸ்ரேலிடம் கேட்டுள்ளது.

இதேவேளை யுத்தம் நடைபெறும் இடத்திற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபையால் 4000 வீரர்கள்கொண்ட சமாதானப்படை அனுப்பிவைக்கப்படவுள்ளது

## வாஷிங்டனில் கார்ட்டர்-பெகின் சந்திப்பு

### செக். ரஷ்யா வாக்களிக்கவில்லை

தென்லெபனன்எல்லையிலிருந்து இஸ்ரேலியப்படைகள்வெளியேறவேண்டும் என்ற அமெரிக்கா ஐ. நா. சபையில் கொண்டுவந்த பிரேரணை தொடர்பான வாக்களிப்பில் சோவியத்யூனியனும் செக்கோஸ்லோவாக்கியாவும் கலந்துகொள்ளவில்லை.

அவ்வேளை சீனா சமுகமளிக்கவில்லை.

### வாஷிங்டனில் பெகின்

இதற்கிடையில் இஸ்ரேலியப் பிரதமர் பெகின் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டருடன் பேச்சுவார்த்தை நடத்தும்பொருட்டு வாஷிங்டன் சென்றுள்ளார்.

பெகின் மூன்று நாட்கள் வாஷிங்டனில் தங்கியிருப்பார். [உ]

## வலதுசாரி முன்னணி வெற்றி

பாரிஸ், மார்ச் 20

பிரெஞ்சு பொதுத் தேர்தலில் மிதவாத வலதுசாரிக் கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

தேர்தல் முடிவுகள் முழுதாக அறிவிக்கப்படாதபோதிலும் இக்கூட்டணிக்கு 288 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன. [உ]

## மொரார்ஜி வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டம்; 200பேர் கைது!

புதுடில்லி, மார்ச் 20

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் இல்லத்திற்குமுன் இன்று ஆர்ப்பாட்டம் செய்த இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர் 200 பேரை பொலிசார் கைது செய்தனர்.

பிரதமரின் வீட்டுக்கும் வாகனங்களுக்கும் கற்களை வீசியவர்கள்மீது பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தில் 12 பொலிசார் காயமடைந்தனர். [ஐ]

# "மத்திய அரசுக்கு பூரண ஒத்துழைப்பு நல்க தயார்"

## புதுடில்லியில் முதல்வர் எம். ஜி. ஆர்.

புதுடில்லி, மார்ச் 20

"மத்திய அரசுக்குத் தனதுபூரண ஒத்துழைப்பினை வழங்க தமிழ்நாடு அரசு தயாராகஉள்ளது. தேசநலன்கருதி மத்திய மாநில அரசுகளுக்கு இடையே நல்லுறவு நிலவவேண்டியதன் அவசியத்தை தமிழ்நாடு அரசுபுரிந்துகொண்டுள்ளது."

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய அபிவிருத்தி சபை மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

மாநில முதலமைச்சர்கள் கலந்துகொண்ட இம்மாநாடு புதுடில்லியில் இருதினங்கள் நடைபெற்றன.

### நேசமனப்பான்மை

முதல்வர் திரு. எம். ஜி. ஆர். மேலும் பேசுகையில், "மத்திய மாநில அரசுகளுக்கு மத்தியில் மட்டுமல்லாது மாநிலங்களுக்கு இடையேயும் நேசமனப்பான்மை இருக்கவேண்டும்.

மத்திய அரசு மின் உற்பத்திக்கு விதித்துள்ள வரியைநீக்க வேண்டும்' என்றார்.

### ஆலோசனை

அவர் தொடர்ந்து பேசுகையில், "வறுமையைஒழிக்கஎடுக்கப்படும் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். 5 ஆண்டு திட்ட நகலின்போது மாநில அரசுகளின் ஆலோசனையும் மத்திய அரசினால் பெறப்படவேண்டும்" என்றார். (உ)

# "ஆட்சியை தொடர்ந்து நடத்தும் பலமுண்டு"

## பாண்டிச்சேரி முதல்வர் சொல்கிறார்

பாண்டிச்சேரி, மார்ச் 20

"தொடர்ந்தும் ஆட்சி நடத்தக்கூடிய பலம் சட்டசபையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு. அவசியமாயின் இதனைப் பரீட்சித்துப் பார்க்கலாம்" என்று பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. எஸ். இராமசாமி நேற்று தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிட்டபடி சட்டசபைக் கூட்டம் எதிர்வரும் 22ம் திகதி நடைபெறும் என்றும் அவர் சொன்னார்.

அ. இ. அ. தி. மு. கவைச் சேர்ந்த நான்கு சட்டசபை உறுப்பினர்கள் கடந்த வாரம் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்துவிட்டனர் என்பது தெரிந்ததே.

இவர்கள் ராஜினாமாச் செய்ததையடுத்து அ. இ. அ. தி. மு. கவின் பலம் சட்டசபையில் 11 ஆகக் குறைந்துவிட்டது. (உ)

## "தரகர் துணை தேவையற்றது"

[மட்டுவில்]

'உங்கள் குறைபாடுகளைப் பற்றி புகார்செய்வதற்குப் பொலிஸ்நிலையம் வருவதற்குப் பொதுமக்கள் மூன்றாவது நபரான தரகர் ஒருவரை நாட வேண்டிய அவசியம் இல்லை"

இவ்வாறு சாவகச்சேரியில் பொலிஸ்நிலையப் பொறுப்பாளர் திரு கே. தர்மதாசா தெரிவித்துள்ளார். இன்ஸ்பெக்டர் திரு. கே. தர்மதாச மேலும் கூறுவதாவது;

பொலிசாராகிய நாங்கள் பொதுமக்களுக்கு தொண்டு செய்வதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளோம் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதும் பொதுமக்களுக்கு பீதியற்ற சமாதானமான வாழ்வை நிலைநாட்டுவதுமே எமது கடமை, இலட்சியம் எல்லாம்" என்றார். [உ]

## சுட்டுக் கொலை

[ஹம்பாந்தோட்டை]

ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த 28 வயதான பியதாஸ என்ற விவசாயி சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

அப்புஹாமி என்ற சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்.


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நினைத்ததை முடிப்பவன்

3-வது வாரம்
புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45. சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

இன்று மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜெயலலிதா நடித்த
அன்பைத்தேடி (புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் கே. ஆர். விஜயா
திருடி (புதிய பிரதி)

Rio Jaffna (Phone:7607)
Daily 10-30 a. m. 4-45, 7-00 and 9-45 p.m
Elizabeth, Ashley, Joc, Don, Baker, JimKelly
in
GOLDEN NEEDLES
[ஒரு பெண்ணின் கராட்டிச் சண்டை பிரமாதம்]
Color (Advance Booking for Families Accepted) Scope

வின்ஸா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார்-நிர்மலா, அசோகன் மனோரமா நடித்த
K. R. G. பிக்ஷர்ஸ்
ஜானகி சபதம்

Regal (Jaffna) Daily 10-30, 2, 4-15, 7-00 9-30
Starring Three of the World's Most Popular Actors
MICHAEL CAINE, DONALD SUTHERLAND, ROBERT DUVALL
Daring attempt by a group of German Paratroopers to Kidnap Britain's Wartime Prime Minister, Winston Churchill
THE EAGLE HAS LANDED
(Color-War film)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
அநேக ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்
எம் ஜி ஆர்-பத்மினி, தங்கவேலு-நம்பியார்
அரசிளங்குமரி (புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா நடித்த
பணக்கார பெண்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
இரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ். நகர்) போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்

வெலிங்டன் ... 

வெஸ்லி (சாவிப்பாய்)
தினசரி: 6-30, 9-30 சனி, ஞாயிறு: 2-30,
ஜெமினி-சரோஜாதேவி
பணமா பாசமா

## அனுராதபுரம் எம். பி. யின் அந்தரங்க செயலாளர்

# காப்பாற்றிய கான்ஸ்டபிளின் கழுத்தில் கத்தியை வைத்து பயமுறுத்தினர்

## சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

அனுராதபுரத்தில் பொலிஸ்கான்ஸ்டபிள் அழகப்பெருமா எங்களை தனது வீட்டில் காப்பாற்றி மறுநாள் வான் ஒன்றில் கச்சேரிக்குப் பாதுகாப்பாகக் கூட்டிச்சென்றார். கான்ஸ்டபிள் ரத்நாயக்கா துவக்குகளுடன் நின்று தன் வீட்டில் தமிழருக்கு பாதுகாப்பளித்தார்.

வழியில் அனுராதபுரம் ஐக்கியதேசியக்கட்சி எம்; பி பண்டாவின் செயலாளர் பத்திராஜ, மற்றும் பலருடன் வானை மறித்து கான்ஸ்டபிளின் கழுத்தில் கத்தியை வைத்து நீ தமிழரை காப்பாற்றப்போறியா? என்று கேட்டார். அதற்கு கான்ஸ்டபிள் நான் என் கடமையைச் செய்கிறேன் என்று கூறி அவரை பேசிவிட்டு சென்றார்.

அக் கூட்டத்தினர் வான் சாரதியை வெளியில் இழுத்து தாக்கியதுடன் எங்களையும் தாக்கினர். என் சகோதரியின் கையில் பலதித காயம் ஏற்பட்டது. வானிலிருந்த 3 மாத குழந்தைக்கும் கண்ணாடி வெட்டுக்காயம் ஏற்பட்டது.

சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த அனுராதபுரம் வர்த்தகரான கந்தையா ராசய்யா சுரேந்திரராஜா மேற்கண்டவாறு கூறினார்.

சுரேந்திரராசா சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது: ஆகஸ்ட் 17ம் தேதி காலை என் தகப்பனார் ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்காக பஸ் நிலையம் சென்றார். அப்போது முதல் நாள் ரயில் நிலயத்தில் தாக்குதலுக்குள்ளான மூவர் வந்தனர். ரயில் பாதையால் ஓடிவந்தார்கள். எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். மூன்று பேரையும் என் தகப்பனார் கூட்டிவந்தார். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தோம்.

பின் தகப்பனார் தபால் கந்தோருக்குப் போனார். அங்கு பல தமிழ்க் கடைகள் சேதம் அடைந்து கொள்ளையடிக்கப் பட்டதாகவும், தமிழர் தாக்கப்பட்டதாகவும் சொன்னார்.

### சிங்களப் பெண் காப்பாற்றினார்

என் சகோதரர் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது பஸ்ஸில் குண்டர்கள் ஏறி பிரயாணிகளை தமிழர்களா? சிங்களவர்களா? என்று கேட்டார்களாம். என் அண்ணனைப் பார்த்து நீ தமிழனா, சிங்களவனா? என்று கேட்ட போது அருகில் இருந்த ஒரு சிங்களப் பெண் 'அவர் என் அண்ணன்' என்று குண்டர்களிடம் கூறி அண்ணனைக் காப்பாற்றியதாகவும் அண்ணன் சொன்னார்.

காலை 9-30 மணிக்கு வேல்ஸ் ரோசுக்கு ஒரு கூட்டத்தினர் வந்தனர். அந்தக் கடையை என் மாமனார் வி. குமாரதலசிங்கம் நடத்தினார். குண்டர்கள் வந்து குளிர்பானம் அருந்தினார்கள். பின் அங்கு கட்டியிருந்த 2 ஆட்டை 'கொற கொற' என்று இழுத்துச் சென்று தென்னை மரத்தில் 'பளார் பளார்' என்று அடித்து, ஆடுகள் துடிதுடிக்க, கார் டிக்கியில் போட்டுக் கொண்டு சென்றார்கள். பின் ஒரு தமிழர் வந்தபோது அவருக்கும் அடித்தார்கள்.

எங்கள் வீட்டிற்குக் குண்டர்கள் வந்தார்கள். எங்கள் குடும்பத்தில் 11 பேர் இருக்கின்றனர். நாங்கள் அயலில் உள்ள மார்ட்டின் சிங்கோ வீட்டிற்குச் சென்று பாதுகாப்பாக இருந்தோம்.

நண்பகல் 12-30 மணிக்கு குண்டர் கூட்டம் எங்கள் வீட்டை முற்றுகையிட்டு உடைத்தார்கள். மார்ட்டின் சிங்கோ வீட்டிலும் வந்து நோட்டம் பார்த்தார்கள். நாங்கள் அருகிலுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் இரத்நாயக்கா வீட்டிற்கு ஓடினோம்; அவர் எங்களுக்கு பாதுகாப்புத் தந்தார்.

அங்கிருந்து எங்கள் வீட்டைப் பார்த்தேன். குண்டர்கள் தாங்கள் விரும்பியபடி கொள்ளையடித்துக்கொண்டிருந்தனர். அவர்களில் இலரைத் தெரியும். ஒருவரது பெயர் பொடி சுட்டா.

கமிஷனர்: வேறு பெயர் உண்டா? தெரியாது. மற்றவர் கருணபாலா, மற்றவர் கருணரத்ன. குண்டர்கள் மற்ற வீடுகளுக்கும் சென்று கொண்டிருந்தனர். வீடுகளைத் தாக்கி கொள்ளையடித்தனர். பின் கான்ஸ்டபிள் இரத்நாயக்கா வீட்டிற்கு வந்தார்கள். தமிழர்கள் இருக்கிறார்களா? என்று தேடிப்பார்த்தார்கள்.

கான்ஸ்டபிள் இரத்நாயக்கா துவக்குடன் வெளியில் வந்து அவர்களைப் பேசி ஒருவரும் வீட்டுக்குள் வராமல் தடுத்தார். அதற்குப் பின் ரத்நாயக்கா வீட்டில் இருக்கப் பயந்தோம்.

பின்னர் அருகிலுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் அழகப்பெருமா வீட்டிற்குப் போனோம். அவர் எங்களை அன்புடன் வரவேற்று, பாதுகாப்பளித்தார். அங்கும் குண்டர்கள் வந்தார்கள். தமிழர்கள் இருக்கிறார்களா? என்று கேட்டார்கள். தேடிப் பார்த்தார்கள். நாங்கள் மறைந்து விட்டோம். இல்லையென்று கூறியதும் சென்றுவிட்டனர்.

கான்ஸ்டபிள் அழகப்பெருமா எங்களை வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு அனுராதபுரம் கச்சேரியில் நிலைமை எப்படி இருக்கிறதென்று அறியச்சென்றார். அவர் திரும்பி வந்து, யாழ்ப்பாணத்தில் சிங்களவர் தாக்கப்பட்டதால்தான் அனுராதபுரத்தில் தமிழர்களைத் தாக்குகிறார்களெனக் கூறினார்.

அன்றிரவு கான்ஸ்டபிள் அழகப்பெருமா வீட்டில் தங்கினோம், எங்களுக்கு உணவும் தந்து பாதுகாப்பளித்தார். அன்றிரவு எங்கள் வீட்டுக்கு குண்டர்கள் தீயிட்டுக்கொளுத்தினர்.

காலையில் கொள்ளையடித்த கூட்டத்தினர்தான் இரவில் வீட்டுக்குத் தீ வைத்தனர். கான்ஸ்டபிள் அழகப்பெருமா எப்படியும் எங்களைக் கச்சேரி முகாமில் சேர்த்துவிட முயற்சி எடுத்தார். 3 ஸ்ரீ 8539 என்ற இலக்கமுள்ள தனிப்பட்ட வான் ஒன்றை வீட்டுக்குக் கொண்டுவந்தார். வானில் டிரைவரும் இருந்தார். நாங்கள் அந்த வானில் கச்சேரி செல்வதற்காக ஏறினோம்.

### வானை மறித்தனர்

அனுராதபுரத்தில் உள்ள யாழ்ப்பாணம் சந்திக்கு வான் வந்ததும், அங்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வீதிக்குக் குறுக்கே நின்று வானை மறித்தனர். வான் சாரதி சாமர்த்தியமாக வானை மறிக்காமல் செலுத்தினார். குண்டன் ஒருவன் கொட்டனால் வான் கண்ணாடியை அடித்து நொருக்கினன். சிறிது தூரம் சென்றதும் வான் நின்றது. வானில் இருந்து இறங்கிய கான்ஸ்டபிள் அழகப்பெருமா, கண்ணாடியை உடைத்தவர்களுக்கு அடித்தார். அப்போது கூட்டத்தினர் வான் சாரதியை வெளியில் இழுத்து அடித்தார்கள். வான் கண்ணாடியை அடித்து நொருக்கினார்கள்.

### குழந்தைகளுக்கு அடித்தனர்

எங்களையும் வெளியில் இழுத்து அடித்தார்கள். என் சகோதரியின் கையை அடித்து முறித்தார்கள். வானிலிருந்த மூன்று மாதக் குழந்தைக்கு அடித்தார்கள். வான் கண்ணாடித்துண்டு தாக்கி குழந்தைக்குக் காயமேற்பட்டது. எங்கும் அல்லோலகல்லோலமாக இருந்தது.

### எம். பியின் செயலாளர்

அனுராதபுரம் வடக்கு யூ. என். பி. பண்டாரவின் அந்தரங்க செயலாளர் பத்திராஜ கத்தியுடன் அக் கூட்டத்தில் நின்றார். அவர் அனுராதபுரத்திலுள்ள யாழ். சந்திப்பகுதி யூ. என். பி. அமைப்பாளராகவும் பத்திராஜ இருந்தது எனக்குத் தெரியும்.

அவர் கத்தியுடன் வந்து, எங்களுக்கு உதவியளித்த கான்ஸ்டபிள் அழகப்பெருமா கழுத்தில் கத்தியை வைத்து நீ, தமிழர்களை காப்பாற்றப் போறாயா? என்று கேட்டார். என் கடமையைச்செய்ய எனக்குத் தெரியும். உன் வேலையைப் பார் என்று அவர் பேசினார். அதன்பின் வான் புறப்பட்டது. ரத்தக்காயங்களுடன் வானில் ஏறினோம். சிறிது தூரம் சென்றதும் மற்றொரு இடத்தில் வான் நிறுத்தப் பட்டது. அங்கு சப்இன்ஸ் பெக்டரும் சார்ஜனும் நின்றார்கள். அவர்களிடம் கான்ஸ்டபிள் அழகப்பெருமா சந்தியில் கூட்டம் நிற்கிறதாகவும், அதனைப் போய் கலைக்குமாறும் கூறினார். இதன்பின் கச்சேரிக்கு போனோம். அங்கு அன்றிரவு குடிக்க தண்ணீரில்லை. பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தோம்.

---


# யாழ் ரோட்டரி நடத்தும்

# சிறந்த நடத்துநர் தெரிவு

இன்று இலட்சோபலட்சம் மக்களின் நாளாந்த இடப் பெயர்ச்சிக்கு ஜீவநாடியாகத் திகழ்வது இலங்கைப் போக்குவரத்துச்சபை என்றால் மிகையாகாது. இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவை சிறப்பதற்கு உயிர்ஓட்டமாக திகழ்பவர்கள் பஸ் நடத்துநர்கள். பஸ் நடத்துநர்கள் சிறந்த முறையில் சேவை செய்தால் சபைக்கும் மக்களுக்கும் பேருதவியாக அமையும்.

பஸ் நடத்துநர்களை மக்கள் பணியில் மேலும் ஊக்கப்படுத்தி உற்சாகமளிக்கும் நோக்கமாக 'சிறந்த பஸ் நடத்துநரை' தெரிவுசெய்து அவர்களுக்கு தங்கப் பதக்கம், வெள்ளிக்கிண்ணம் போன்ற பல அரிய பரிசுகளை அளிக்க யாழ். ரோட்டரிக் கழகம் முன்வந்துள்ளது.

புதுவருடப் பரிசுப் போட்டியாக நடக்கும் இப்போட்டியில் சிறந்த முறையில் சேவை செய்யும்பஸ் நடத்துநரை தெரிவு செய்யும் உரிமையை பொதுமக்களிடமே ரோட்டரிக் கழகம் விட்டுள்ளது.

எனவே கீழ்க்காணப்படும் கூப்பனில் பொதுமக்கள் தங்களுக்கு சிறந்த முறையில் சேவைசெய்யும் பஸ் நடத்துநரின் பெயரைக் குறித்து இன்றே யாழ். ரோட்டரிக் கழகத்திற்கு தங்கள் தீர்ப்பை அறிவிக்கவேண்டும்.

இது பொதுமக்கள் தங்கள் சமுதாயத்திற்கு ஆற்றும் கடமையுங்கூட. மறந்துவிடாதீர்கள். முடிவுதிகதி 4-4-78;

யாழ். ரோட்டரி நடத்தும்
சிறந்த நடத்துனர் தெரிவு
கூப்பன்

நடத்துநரின் பெயர்........................................

பதிவு இலக்கம்..............................

அனுப்புபவரின் பெயர் ..................................

அனுப்புபவரின் விலாசம்..................................

திகதி ........................ ........................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)


---

## அகதிகள்—

[6ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். வளாகத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள் சொந்தப் பிரதேசமான அனுராதபுரத்திலிருப்பதால் அவர்களைப் பற்றி தாம் கவலைப்படத் தேவையில்லையென்று உதவிப் பொலிஸ் அதிபர் மெண்டிஸ் அரசாங்க அதிபரிடம் கூறினார்.

### மனிதாபிமான பிரச்னை

அகதிகள் பிரச்னைதான் பெருந்தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருப்பதாகவும் இது மனிதாபிமானத்துடன் அணுகவேண்டிய பிரச்னையாகுமென்றும் இனியும் தாமதமின்றி அகதிகளை அனுப்பவேண்டுமென்றும் உதவிபொலிஸ் அதிபர் மெண்டிஸ் கூறினார். அரசாங்க அதிபர் இந்த ஆலோசனையை ஏற்கவில்லை. அதனால் உதவி பொலிஸ் அதிபர் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டார்.

அகதிகளின் அதிர்ஷ்டமோ என்னவோ அந்த நேரத்தில், அவ்விடத்திற்கு இ. போ. ச அதிகாரிகள் சிலர் வந்தனர். எங்களுக்கு பஸ் தேவைப்படுவதாக அவர்களிடம் கூறினோம். அவர்கள் மேலும் 6 பஸ்களை தந்துதவுவதாகக் கூறினார்கள். இதனால் இப் பிரச்னை தீர்ந்தது. கச்சேரி வளவிற்குள் வந்த 6 பஸ்களும் மீண்டும் வீதிக்கு வந்தன 12 பஸ்கள் வவனியா நோக்கிப் புறப்பட்டன. போகும் வழிகளில் குண்டர்கள் வீதியருகில் கத்தி கொட்டன்களுடன் நின்றனர். அச்சமயம் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தது. நான் சென்ற பஸ்ஸிற்கு இரு தடவைகள் கல் வீசப்பட்டது.

இச்சம்பவம் பற்றி நான் பிரதமருக்கு கடிதம் எழுதினேன். (அ)

---

### சிரமம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு மின் இணைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து 3 மாதகாலமாகியும் இதுவரை மின்சார விநியோகம் செய்யப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களும் வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளர்களும் மிகுந்த சிரமமடைகின்றனர். (உ)

---


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### பொதுமக்களையும் பிரதிநிதிகளையும்

# பொலிசார் மதிக்காவிடில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாது

## சன்சோனிக் கமிஷன்முன் யாழ். அரசாங்க அதிபர் ஜோசப் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"பொதுமக்களையும் அவர்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளையும் பொலிசார் மதிப்பளித்து நடக்கும்வரை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள முயற்சித்து முடியாமல் போய்விட்டது. பொலிஸ் நிலையத்திற்கு நேரில் செல்ல சாதாரண பிரஜையைப் போல நானும் பயந்தேன்"

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.ஏ. ஏ. ஜோசப் நேற்று சன்சோனிக்கமிஷன் முன் சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்

### இரகசிய சாட்சியம்

மீகலாகமவைச் சேர்ந்த பொறியியலாளர் என். தவருபனும். நிலஅளவையாளர் ஆர். விமலேஸ்வரனும், நேற்று சுமார் ஒருமணிநேரம் இரகசியமாக வாக்குமூலமளித்தனர்.

அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் சட்டத்தரணி அண்டலூட் மணிவாசகரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:

அரசாங்க அதிபர் லீவில் சென்ற சமயங்களில் நான் அவருக்குப் பதிலாக கடமையாற்றுவேன். நான் அரசாங்க அதிபருடன் மிகநேசமாகவே பழகிவந்தேன். அரசாங்க அதிபருக்கும் பொலிஸ் அதிபருக்குமிடையில் நல்லெண்ணம் இருக்கவில்லை.

கச்சேரியில் உதவி அரசாங்க அதிபர்களும் யாழ் மாவட்டத்தில் 16 உதவி அரசாங்க அதிபர்களும் கடமையாற்றி வந்தார்கள்.

அரசாங்க அதிபர்தான் இணைப்புக் குழுவுக்குத் தலைவராகக் கடமையாற்றி வந்தார். பொலிஸ் அதிபரும் இணைப்புக் குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தார் இங்குள்ள உண்மையான நிலையை அரசுக்கு எடுத்துக்கூறுவது அரசாங்க அதிபரின் கடமைகளில் ஒன்றாகும். கலவரம், வெள்ளப்பெருக்கு, பயங்கரவாத இயக்கம் போன்ற காலங்களில் அரசாங்க அதிபர் மாவட்டத்தின் முழுப் பொறுப்பாகவும் இருப்பார்.

சட்: 1971ம் ஆண்டுப் பயங்கரவாத இயக்கத்தின்போது வவுனியா அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, அம் மாவட்டத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்? ஆம்.

சட்: 1958ம் ஆண்டு வகுப்புக் கலவரத்தின்போது அனுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவிகாரை, முழுப் பொறுப்பையும் தன்வசம் வைத்திருந்தார்? ஆம்.

சட்: அரசாங்க அதிபருக்கும் பொலிசாருக்குமிடையில் நல்லெண்ணம் இருந்தால் பிரச்னை இருக்காது? ஆம். நல்லெண்ணம் இல்லாவிடில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது கஷ்டம்.

அகதிகள் நிவாரணம் பற்றி கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், நாகவிகாரையில் தங்கியிருந்த அகதிகளுக்கு நாகவிகாரைப் பிரதம குருவின் சிபாரிசில் 350 ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது பற்றித் தமக்குத் தெரியாதென்றும் திரு. ஜோசப் கூறினர்.

(அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசப்பின் சாட்சியம் நாளை தொடர்ந்து வெளிவரும்.)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் மகோற்சவம் 16ம் திருவிழாவாகிய இன்று பகல் பஞ்சமூர்த்திகள் பூஜையாகி மஞ்சத்தில் உள்வீதி வலம் வருவதுடன் மாலை 6 30 மணிக்கு பூஜையாகி விநாயகப்பெருமான் முருகப்பெருமான் இடபவாகனத்திலும் உமா மகேஸ்வரர் பெரிய சப்பரத்தில் இடபவாகனத்திலும் வெளிவீதிவலமாக வந்து காட்சியளிப்பதுடன் திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களின் கதாப்பிரசங்கமும் நிகழும். [உ]

°° °° °°

(யாழ்ப்பாணம்)

யாழ். அமெச்சூர் விளையாட்டுக்கழகத்தினுல் கனடிய ஹைகமிஷனின் ஆதரவுடன் மொன்றியலில் நடைபெற்ற 21-வது ஒலிம்பிக்விளையாட்டுப் போட்டிகள் சம்பந்தமான திரைப்படம் இன்று மாலை 6-30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் திரையிடப்படவிருக்கிறது. பிரவேசம் இலவசமாகும். (உ)

## அகதிகள்... கும்பிட்டு மன்றாடியும் பொலிசார் அலட்சியம் செய்தனர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அவர் கூறினர் நான் சாரதிகளைத் தருவதாகக் கூறிலேன். அவர் 12 சாரதிகள் தேவையெனக் கூறினர்.

நான் கச்சேரியிலுள்ள அகதிகள் முகாமிற்கு சென்றேன் 15 நிமிடத்திற்குள் 8சாரதிகளை உதவி பொலிஸ் அதிபரிடம் கூட்டி வந்தேன். மற்றும் 4 சாரதிகளை சிறிது நேரத்தில் கூட்டி வருவதாகச் சொன்னேன். 6 இராணுவ சாரதிகள் இருப்பதாகவும், அதனுல் வேறு சாரதிகளை தேடத்தேவையில்லையென்றும் உதவிப் பொலிஸ் அதிபர் கூறினர். சாரதிகளில் சிலர், லைசென்ஸையும் தொலைத்துவிட்டார்கள். சாரதிகள் எனநிரூபிக்க சில மணிநேரம் சென்றது. அதன் பின்பும் தாமதம் ஏற்பட்டது.

### ராணுவ சாரதிகள்

அதன் பின் 6 இராணுவ சாரதிகளை கொண்ட பஸ்கள் கச்சேரி வளவுக்குள் நிறுத்தப்பட்டது. மற்றும் ஆறு சாரதிகள் பஸ்களைக் கொண்டுவர இ. போ. ச. டிப்போவுக்குச் செல்லவில்லை நான் இதுபற்றி உதவிப் பொலிஸ் அதிபரிடம் கேட்டபோது சாரதிகளை டிப்போவுக்கு அனுப்ப வாகனம் இல்லையெனக் கூறினர்.

நான் இராணுவச் சாரதி ஒருவரிடம் சென்று ஆறு சாரதிகளை இ. போ. ச. டிப்போவிற்குக் கொண்டுசெல்லுமாறு அரசாங்க அதிபர் என்னிடம் கூறியுள்ளதாகத் தெரிவித்தேன். அவர் சாரதிகளைத் தனது வாகனத்தில் ஏற்றி இ. போ. ச. டிப்போவிற்குக் கொண்டுசென்றர்.

### டிக்கட் வாங்க பணம் ஏது?

நான் அரசாங்க அதிபரைச் சந்தித்து, பஸ்கள் வந்துவிட்டதாகவும், இன்னும் ஏன் தாமதிக்கவேண்டுமென்றும் கேட்டேன். கண்டக்டர்கள் வந்து டிக்கட் வழங்குவதற்காகக் காத்திருப்பதாக அரசாங்க அதிபர் கூறினர்.

அகதிகளில் பெரும்பாலானோர் உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து உடுத்த உடையுடன் வந்திருந்தார்கள். "அவர்களிடம் டிக்கட்டுக்கும் பணம் ஏது?" என்று அரசாங்க அதிபரிடம் கேட்டேன். இலரிடம் காலை உணவிற்குக்கூட காசில்லாமல் பட்டினி கிடக்கும் இந்தநிலையில், அவர்கள் பணம் கொடுத்து டிக்கட் வாங்குவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாமா? என்றும் கேட்டேன்.

### இலவசப் பயணத்திற்குச் சட்டமில்லை

இவ்விடயத்தில் தன்னுல் உதவி செய்யமுடியாதென்றும் இலவசமாகப் பிரயாணம் செய்ய இ. போ. ச. சட்டம் இடங்கொடுக்காதென்றும் அரசாங்க அதிபர் கூறினர்.

நானும் எனது நண்பர் ஒருவரும் டிக்கட்டுக்குரிய பணத்திற்கு நாங்கள் பொறும்பென்று அரசாங்க அதிபரிடம் கூறினேம். பஸ்களில் அகதிகளை ஏற்ற அனுமதி வழங்குமாறு கேட்டேன். அவர் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று பதிலளிக்குமுன் நாங்கள் போய் 12 பஸ்களில் அகதிகளை ஏற்றிவிட்டோம் நீண்ட நேரத்தின் பின் பஸ்கள் கச்சேரி வளவுக்குள்ளிருந்து வீதிக்கு வந்தன. வவுனியா வரை பஸ்களுக்கு இராணுவம் பாதுகாப்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 15 நிமிடமாகியும் பஸ்கள் புறப்படவில்லை.

### சிங்கள மாணவர்கள்

நான் மீண்டும் அரசாங்க அதிபரிடம் சென்றேன். பஸ் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த சிலருடன் பேசிக்கொண்டிருந்தார். யாழ்ப்பாண வளாகத்திலிருந்து வந்துள்ள சிங்கள மாணவர்களை அனுராதபுரத்திலிருந்து அவர்கள் வீடுகளுக்கு கொண்டுபோய்விட பஸ்கள் தேவையென்றும், ஆதனுல் 6 பஸ்களிலிருந்து அகதிகளை இறங்குமாறும் அரசாங்க அதிபர் கூறினர். இந்தநேரத்தில் சில பஸ்கள் திரும்பி, கச்சேரி வளவிற்குள் சென்றது. ஒரு பஸ்ஸிலிருந்து அகதிகள் இறங்கிவிட்டார்கள்.

அங்கு நின்ற உதவிபொலிஸ் அதிபர் மெண்டிஸ், இந்த நடவடிக்கையால் ஆத்திரமடைந்தவராகக் காணப்பட்டார்.

[5ம் பக்கம் பார்க்க]

### துரையப்பா—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டது.

### மானிப்பாய் வங்கி கொள்ளை

மானிப்பாய் வங்கிக் கொள்ளை சம்பந்தமான வழக்கும் ஜூலை 3ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [கி-ம]

SAUDI CEMENT OF JEDDAH
SAUDI ARABIA

REQUIRES THE FOLLOWING PERSONNEL

Assistant Works Manager
(Mechanical Engineer Cement)
Supervising Engineer
(Grinding Burning)
Safety Engineer
Foreman — Crushing Plant
Foreman — Electronic
Foreman a/c and Refrigeration
Foreman — Machine Shop
Technical Instructor
Foreman — Limestone Quarry
Shift Foreman
Panel Operators.

Safety Inspector
Assistant Foreman - Carpentry Shop.
Instrument Technicians
Welders
Crusher Operators
Compressor Fitters
Millers
Fitters
H. E. Drivers
Pipe Fitters
Packing Operators.

APPLICANTS FOR THE ABOVE POSTS MUST HAVE CEMENT PLANT OPERATION EXPERIENCE

Please Apply Before 25th March giving the following Data together with 3 Passport size Photographs and Stamped Self Addressed Envelope.

NAME, ADDRESS, TELEPHONE NUMBER, DATE OF BIRTH, CIVIL STATUS, EDUCATIONAL AND PROFESSIONAL QUALIFICATIONS, WORK EXPERIENCE, KNOWLEDGE OF ENGLISH AND OTHER FOREIGN LANGUAGES AND TWO REFEREES.

SELECTION BY SAUDI CEMENT SELECTION TEAM DUE END MARCH.

NO PERSONAL CALLERS PLEASE.

ADDRESS APPLICATIONS TO:

SAUDI CEMENT
C/o 430, Galle Road,
COLOMBO 3.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka